தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மே 2, செவ்வாய்க்கிழமை

சித்திரை 19, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு—2020

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை''

பிற உயிர்கள் படும் துன்பத்தை, தன் துன்பம்போல் கருதி காப்பாற்றாவிட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகப் போகும் பயன்தான் என்ன ?

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

காவல்துறை மற்றும் நீதி நிர்வாகத்துறை மாவட்ட அதிகார வரம்பு மாற்றம்

169—(*வினா எண். 245)—திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32-வது வட்டத்தைச் சார்ந்த கொளத்தூர் பகுதி, காவல்துறை மற்றும் நீதி நிர்வாகத் துறைகள் செங்கை அண்ணா மாவட்ட அதிகார வரம்பின் கீழே நீடிப்பது மாற்றியமைக்கப்பட்டு, சென்னை மாநகர காவல் மற்றும் நீதி நிர்வாக அதிகாரிகளின் வரம்பின் கீழ் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32-வது வட்டத்தைச் சார்ந்த கொளத்தூர் பகுதி, ஏற்கெனவே சென்னை நகர தலைமைக் குற்றவியல் நீதிபதியின் எல்லைக்குட்பட்டும் சென்னை செஷன்ஸ் நீதிபதியின் எல்லைக்குட்படுத்துவதற்குமான ஆணை—அரசாணை (நிலை) எண். 3154-உள்துறை, நாள் 14-11-1986ன்படி வெளியிடப்பட்டது. சென்னை நகர காவல் எல்லையின்கீழ் கொண்டு வருவதைப் பற்றி இப்போதுதான் வேறு 9 காவல் நிலையங்கள் சென்னை நகர காவல் எல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால், பிறகுதான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் உட்பட, சில மாநகராட்சி வட்டங்கள் ஏற்கெனவே செங்கை-அண்ணா மாவட்டத்தில் சேர்ந்திருந்து, பிறகு சென்னை மாநகராட்சி 150 வட்டங்களாக உயர்த்தப்பட்ட போது, சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்டது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இந்தக் காவல் நிலையங்கள் மற்றும் நீதித் துறையைச் சார்ந்த நிர்வாகம் சென்னை மாநகரத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்படுவதுதான் பொருத்தமாக இருக்கும். என்றுதான் இந்த வினா எழுப்பப்பட்டது. ஏற்கெனவே சில காவல் நிலையங்கள் சென்னை மாநகராட்சி காவல்துறை ஆணையரின் வரம்பின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிற காரணத்தால், இந்தப் பகுதியும் மற்றும் கொடுங்கையூர் போன்ற பகுதியும்கூட சென்னை மாநகர காவல் துறை ஆணையரின் நிர்வாகத்தின் கீழும், சென்னை நகர நீதி நிர்வாகத்தின்கீழும் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இப்போதுதான் காவல்துறை மானியத்தின் போது அறிவித்தபடி வில்லிவாக்கம், ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, பரங்கிமலை, மீனம்பாக்கம், கருணாநிதிநகர், ஆதம்பாக்கம் ஆகிய 9 காவல் நிலையங்களை செங்கை-அண்ணா மேற்கு மாவட்ட எல்லையிலிருந்து பிரித்து, சென்னைப் பெருநகர் காவல் சரகத்தோடு அவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து—அதாவது கொளத்தூர் பகுதியையும் இதில் இணைப்பது குறித்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவினாசியில் தீயணைப்பு நிலையம்

170—(*வினா எண். 523) திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவினாசியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோவை மாவட்டம், அவினாசியில் ஓர் ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்கும் பொருட்டு, அதனை முன்னுரிமைப் பட்டியலில் 46-வது